# இயல் 6
# அகப்பொருள் இலக்கணம்

1. கொடுக்கப்பட்டுள்ள விடைகளில் சரியான விடை வரிசையைத் தேர்ந்தெடு.

| | | |
|---|---|---|
| 1. குறிஞ்சி | - | 1. பேரூர், மூதூர் |
| 2. முல்லை | - | 2. பட்டினம், பாக்கம் |
| 3. மருதம் | - | 3. சிறுகுடி |
| 4. நெய்தல் | - | 4. குறும்பு |
| 5. பாலை | - | 5. பாடி, சேரி |

அ) 3,4,1,2,5 ஆ) 4,3,1,5,2 இ) 3,2,5,1,4 ஈ) 3,5,1,2,4

2. பொருத்தமான விடையைக் கண்டறிக.

| | | |
|---|---|---|
| 1. குறிஞ்சி | - | 1. வற்றிய சுனை, கிணறு |
| 2. முல்லை | - | 2. மனைக்கிணறு, பொய்கை |
| 3. மருதம் | - | 3. காட்டாறு |
| 4. நெய்தல் | - | 4. அருவிநீர், சுனைநீர் |
| 5. பாலை | - | 5. மணற்கிணறு, உவர்க்கழி |

அ) 4,3,2,5,1 ஆ) 5,4,1,2,3 இ) 4,3,5,1,2 ஈ) 3,4,5,2,1

3. பொருந்தாத இணையைக் கண்டறிக.

| | | |
|---|---|---|
| அ) முல்லை | - | வரகு, சாமை |
| ஆ) மருதம் | - | செந்நெல், வெண்ணெல் |
| இ) நெய்தல் | - | தினை |
| ஈ) பாலை | - | சூறையாடலால் வரும் பொருள் |

4. முல்லை நிலத்திற்குரிய பெரும்பொழுதினைத் தேர்ந்தெடு.

அ) கார்காலம் ஆ) குளிர்காலம்

இ) முன்பனி ஈ) பின்பனி

5. ஐந்திணைகளுக்கு உரியன

i) முதற்பொருள் ii) கருப்பொருள் iii) உரிப்பொருள்

அ) i - சரி ஆ) ii - சரி

இ) மூன்றும் சரி ஈ) iii - மட்டும் சரி

6. பொருத்திக் காட்டுக :

| | | | | |
|---|---|---|---|---|
| i) குறிஞ்சி | - | கடலும் கடலை சார்ந்த இடமும் | அ) | 4, 3, 2, 1 |
| ii) முல்லை | - | வயலும் வயல் சார்ந்த இடமும் | ஆ) | 3, 4, 1, 2 |
| iii) மருதம் | - | காடும் காடு சார்ந்த இடமும் | இ) | 4, 2, 3, 1 |
| iv) நெய்தல் | - | மலையும் மலைசார்ந்த இடமும் | ஈ) | 3, 4, 2, 1 |

7. மணலும் மணல் சார்ந்த இடமும் - எத்திணைக்குரியது?

அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) நெய்தல் ஈ) பாலை

8. பொழுது எத்தனை வகைப்படும்?

அ) இரு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஆறு

9. பொருத்திக் காட்டுக.

| | | | | |
|---|---|---|---|---|
| i) கார்காலம் | - | மாசி, பங்குனி | அ) | 4, 3, 2, 1 |
| ii) குளிர்காலம் | - | மார்கழி, தை | ஆ) | 3, 4, 1, 2 |
| iii) முன்பனிக்காலம் | - | ஐப்பசி, கார்த்திகை | இ) | 4, 2, 3, 1 |
| iv) பின்பனிக்காலம் | - | ஆவணி, புரட்டாசி | ஈ) | 3, 4, 2, 1 |

10. இளவேனிற் காலத்துக்குரிய மாதங்கள்

அ) ஆவணி, புரட்டாசி ஆ) சித்திரை, வைகாசி

இ) ஆனி, ஆடி ஈ) மார்கழி, தை

11. ஆனி, ஆடி முதலான மாதங்கள்

அ) கார்காலம் ஆ) குளிர்காலம்

இ) இளவேனிற்காலம் ஈ) முதுவேனிற்காலம்

12. பொருத்திக் காட்டுக.

| | | |
|---|---|---|
| i) காலை | - | மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை |
| ii) நண்பகல் | - | பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை |
| iii) எற்பாடு | - | காலை 10 மணி முதல் 2 மணி வரை |
| iv) மாலை | - | காலை 6 மணி முதல் 10 மணி வரை |

அ) 4, 3, 2, 1 ஆ) 2, 1, 3, 4 இ) 4, 3, 1, 2 ஈ) 2, 1, 4, 3

13. இரவு 10 மணி முதல் இரவு 2 மணி வரை உள்ள சிறுபொழுது

அ) எற்பாடு ஆ) மாலை இ) யாமம் ஈ) வைகறை

14. வைகறைக்குரிய கால நேரம்

அ) இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை ஆ) காலை 6 மணி முதல் 10 மணி வரை

இ) காலை 10 மணி முதல் 2 மணி வரை ஈ) இரவு 10 மணி முதல் இரவு 2 மணி வரை

i) குறிஞ்சி - கார்காலம்
ii) முல்லை - குளிர்காலம், முன்பனிக்காலம்
iii) மருதம், நெய்தல் - இளவேனில், முதுவேனில், பின்பனி
iv) பாலை - ஆறு பெரும்பொழுதுகள்

அ) 2, 1, 4, 3 ஆ) 4, 1, 3, 2 இ) 4, 3, 1, 2 ஈ) 2, 4, 3, 1

16. நண்பகல் எத்திணைக்குரிய சிறுபொழுது?

அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) நெய்தல் ஈ) பாலை

17. பொருத்திக் காட்டுக.

| | | | | |
|---|---|---|---|---|
| i) குறிஞ்சி | - | வைகறை | அ) | 3, 4, 1, 2 |
| ii) முல்லை | - | எற்பாடு | ஆ) | 4, 3, 2, 1 |
| iii) மருதம் | - | யாமம் | இ) | 1, 2, 3, 4 |
| iv) நெய்தல் | - | மாலை | ஈ) | 3, 2, 1, 4 |

18. திணைகளுக்குரிய தெய்வத்தைப் பொருத்திக் காட்டுக.

| | | | | |
|---|---|---|---|---|
| i) குறிஞ்சி | - | கொற்றவை | அ) | 5, 4, 3, 2, 1 |
| ii) முல்லை | - | வருணன் | ஆ) | 4, 5, 2, 3, 1 |
| iii) மருதம் | - | இந்திரன் | இ) | 3, 2, 4, 5, 1 |
| iv) நெய்தல் | - | திருமால் | ஈ) | 1, 2, 3, 4, 5 |
| v) பாலை | - | முருகன் | | |

19. திணைகளுக்குரிய மக்கள் பொருத்திக் காட்டுக.

| | | | | |
|---|---|---|---|---|
| i) வெற்பன் | - | குறிஞ்சி | அ) | 5, 4, 3, 2, 1 |
| ii) தோன்றல் | - | முல்லை | ஆ) | 4, 5, 2, 3, 1 |
| iii) ஊரன் | - | மருதம் | இ) | 3, 5, 4, 1, 2 |
| iv) சேர்ப்பன் | - | நெய்தல் | ஈ) | 1, 2, 3, 4, 5 |
| v) எயினர் | - | பாலை | | |

20. பொருத்திக் காட்டுக.

| | | | | |
|---|---|---|---|---|
| i) புலி | - | பாலை | அ) | 5, 4, 3, 2, 1 |
| ii) மான் | - | நெய்தல் | ஆ) | 4, 5, 2, 3, 1 |
| iii) எருமை | - | மருதம் | இ) | 2, 1, 4, 5, 3 |
| iv) முதலை | - | முல்லை | ஈ) | 4, 2, 3, 1, 5 |
| v) வலியிழந்த யானை | - | குறிஞ்சி | | |

21. பொருத்திக் காட்டுக.

| | | | | |
|---|---|---|---|---|
| i) குறிஞ்சி | - | குரவம், பாதிரி | அ) | 5, 4, 3, 2, 1 |
| ii) முல்லை | - | தாழை | ஆ) | 4, 5, 2, 1, 3 |
| iii) மருதம் | - | தாமரை, செங்கழுநீர் | இ) | 2, 3, 4, 1, 5 |
| iv) நெய்தல் | - | தோன்றி | ஈ) | 3, 1, 4, 2, 5 |
| v) பாலை | - | காந்தள் | | |

22. பொருத்திக் காட்டுக.

| | | | | |
|---|---|---|---|---|
| i) குறிஞ்சி | - | அகில், வேங்கை | அ) | 1, 2, 3, 4, 5 |
| ii) முல்லை | - | கொன்றை, காயா | ஆ) | 2, 3, 1, 5, 4 |
| iii) மருதம் | - | காஞ்சி | இ) | 3, 4, 2, 1, 5 |
| iv) நெய்தல் | - | புன்னை, ஞாழல் | ஈ) | 5, 4, 3, 2, 1 |
| v) பாலை | - | இலுப்பை | | |

23. பொருத்திக் காட்டுக :

| | | | | |
|---|---|---|---|---|
| i) குறிஞ்சி | - | கடற்காகம் | அ) | 4, 2, 3, 1, 5 |
| ii) முல்லை | - | காட்டுக் கோழி, மயில் | ஆ) | 5, 4, 3, 2, 1 |
| iii) மருதம் | - | நாரை, நீர்க்கோழி, அன்னம் | இ) | 4, 3, 1, 5, 2 |
| iv) நெய்தல் | - | கிளி, மயில் | ஈ) | 3, 4, 2, 5, 1 |
| v) பாலை | - | புறா, பருந்து | | |

24. விளரியாழ் எத்திணைக்கு உரியது?

அ) குறிஞ்சி ஆ) மருதம் இ) நெய்தல் ஈ) பாலை

25. பொருத்திக் காட்டுக :

| | | | | |
|---|---|---|---|---|
| i) குறிஞ்சி | - | துடி | அ) | 5, 4, 3, 2, 1 |
| ii) முல்லை | - | மீன் கோட்பறை | ஆ) | 4, 5, 2, 1, 3 |
| iii) மருதம் | - | மணமுழா | இ) | 3, 4, 5, 2, 1 |
| iv) நெய்தல் | - | ஏறுகோட்பறை | ஈ) | 3, 5, 1, 2, 4 |
| v) பாலை | - | தொண்டகம் | | |

26. செவ்வழிப்பண், பஞ்சுரப்பண் முதலியனவற்றுக்குரிய திணைகள் முறையே

அ) நெய்தல், பாலை ஆ) குறிஞ்சி, முல்லை

இ) மருதம், நெய்தல் ஈ) மருதம், பாலை